**ஒன்டாரியோவில் ஒரு புது வாழ்வை கட்டியெழுப்புதல்**

புதிதாக வருவோருக்கு ஒரு வழிகாட்டி

**கீழ்க்காண்பனபற்றி கற்றுக்கொள்ளுதல்:**

## உங்கள் மொழித் திறமைகளை முன்னேற்றுதல்

ஒன்டாரியோவுக்கு புதியவராக,உங்களுக்கு பல கேள்விகள் இருக்கலாம். கீழ்க்காண்பன பற்றி அதிகம் கற்றுக்கொள்ள இந்த வழிகாட்டி உங்களுக்கு உதவும்:

- ஆங்கிலம் மற்றும் பிரெஞ்ச் படித்தல்
- நீங்கள் எங்கே படிக்கலாம்
- வேலைத்தல மொழித்திறமைக்கு விசேஷ பயிற்சி
- கல்லூரி மற்றும் பல்கலைக்கழகத்திற்கு மொழிப் பயிற்சி
- உங்கள் பிள்ளைகளுக்கு மொழி உதவி பெறுதல்.

**கனடாவில் என்ன மொழிகள் பேசப்படுகின்றன?**

ஆங்கிலம், பிரெஞ்ச் என இரண்டு உத்தியோகபூர்வ மொழிகளை கனடா கொண்டுள்ளது. வேலையில் பாவிக்கப்படும் மற்றும் உங்கள் சமூகத்தில் பாவிக்கப்படும் மொழியில் பேச்சுத் தொடர்புகொள்ள வேண்டிய திறமைகளை நீங்கள் கொண்டிருப்பது அவசியம்.

**நீங்கள் ஒன்டாரியோவுக்கு வருவதற்கு முன்…**

நீங்கள் ஒன்டாரியோவுக்கு வருமுன்பே உங்கள் மொழித் திறமைகளை முன்னேற்றிக்கொள்ள பல வழிகள் இருக்கின்றன. உங்கள் நாட்டிலேயே நீங்கள் மொழிப் பாடத்திட்டங்களை பெறலாம். நீங்கள் தொலைவில் இருந்தும்கூட கல்விப் பாடத்திட்டங்களை எடுக்கலாம். உங்கள் மொழித் திறமைகளை அளவிடுவதற்கும் உங்கள் மொழித் திறமைகளை முன்னேற்றுவதற்கும் எந்த வகையான மொழிப் பயிற்சி உங்களுக்குத் தேவை என்று தீர்மானிப்பதற்கும் உதவக்கூடிய பல வலைப்பக்கங்கள் இருக்கின்றன. ஒன்டாரியோ குடிவரவு வலைப்பக்கத்தில், 'Learn English' அல்லது ' apprendre le francais' என்ற பகுதிக்கு செல்வதன் மூலம் அதிகத்தைக் கற்றுக் கொள்ளுங்கள். இந்த வலைப்பக்கம் கீழ்க்காணும் முகவரியில் உள்ளது:
www.OntarioImmigration.ca

**என்ன வகையான மொழிப்பயிற்சிகளை நான் தெரிவு செய்யலாம்?**

ஒன்டாரியோவில், ஆங்கில மொழிப் பயிற்சி 'English-as-a-Second-Language' அல்லது ESL என அழைக்கப்படுகிறது. பிரெஞ்சில் மொழிப்பயிற்சி 'French-as-a-Second-Language' அல்லது FSL என அழைக்கப்படுகிறது. ஒன்டாரியோ குடிவரவு வலைப்பக்கத்தில்,

ஒன்டாரியோவில் வாழ்வதற்கும் வேலை செய்வதற்கும் உங்களுக்கு வேண்டிய மொழித் திறன்களைப் பற்றி அதிகத்தை நீங்கள் கற்றுக்கொள்ளலாம்.

**வயது வந்தோர்க்கான மொழி வகுப்புகளை நான் எங்கே கண்டடையலாம்?**

ஒன்டாரியோவில் நீங்கள் பல்வேறுபட்ட முழுநேர அல்லது பகுதிநேர மொழி வகுப்புகளை தெரிவு செய்யலாம். 'வயது வந்தவர்களுக்கான கிரெடிற் இல்லாத மொழிப்பயிற்சி' ('adult non-credit language training') எனப்படும் சில வகுப்புகள் ஒன்டாரியோ மாகாணத்தால் வழங்கப்படுகின்றன. ' கனடாவுக்கு புதிதாக வருவோருக்கான மொழிப்போதனை' ('Language Instruction for Newcomers to Canada'- LINC) எனப்படும் மற்ற வகுப்புகள் கனேடிய அரசாங்கத்தால் வழங்கப்படுகின்றன. ஆங்கில மற்றும் பிரெஞ்ச் பாடசாலை நிர்வாக சபைகள் மற்றும் சமூக ஏஜன்சிகள் மூலமாக, இந்த இரண்டு வகையான வகுப்புகளும் ஒன்டாரியோ முழுவதும் வழங்கப்படுகின்றன. இந்த வகுப்புகள் உங்களுக்கு பல்வேறுபட்ட வழிகளில் உதவக்கூடும்:

- நீங்கள் ஆரம்ப, இடைநிலை அல்லது உயர்தர பயிற்சிகளைத் தெரிவுசெய்யலாம்.
- கதைக்க, செவிகொடுக்க, வாசிக்க மற்றும் எழுத பொதுத்திட்டங்கள் உள்ளன.
- அக்கவுன்டிங், கம்ப்யூட்டர்கள் அல்லது பேச்சுத் தொடர்பு போன்ற விசேஷ வேலைகளில் உங்கள் வியாபாரத் திறன்களை மேம்படுத்த சில பயிற்சித் திட்டங்கள் உதவும்.
- சொந்த நாட்டிலிருந்து கல்வியறிவு குறைவாகவே உங்களுக்கு கிடைத்திருந்தால், உங்களுக்கு உதவக்கூடிய சில ESL படிப்பறிவு வகுப்புகளும் கிடைக்கப்பெறுகின்றன.
- கல்லூரி அல்லது பல்கலைக்கழக பிரவேசத்திற்குத் தேவைப்படும் TOEFL போன்ற மொழிப்பரீட்சைக்கு உங்களை தயார்ப்படுத்தும் வகுப்புகளும் வழங்கப்படுகின்றன.
- கனடாவையும் ஒன்டாரியோவையும் பற்றிக் கற்றுக்கொள்ள உதவும் குடியுரிமை மற்றும் மொழிவகுப்புகள் இருக்கின்றன. அதோடு குடியுரிமைப் பரீட்சையில் சித்தியடைய உங்களுக்கு வேண்டிய தகவலை இவை தருகின்றன.

மொழிப் பயிற்சி வகுப்புகள் இலவசமானவை. அவை உங்கள் சமூகத்தில் பகலில், இரவில் அல்லது வார இறுதிகளில் கிடைக்கப்பெறக்கூடும். நீங்கள் LINC வகுப்புகளில் சேர தகுதியுடையவராயின், முதலில் உங்கள் மொழித் திறமை சார்ந்த மதிப்பீடு தேவைப்படும். இது ஒரு மொழி மதிப்பீட்டு நிலையத்தின் மூலம் நடாத்தப்படும். அதன் பிறகு மொழி மதிப்பீட்டு நிலையம் உங்களுக்கு ஏற்ற ஒரு திட்டத்திற்கு உங்களை வழிநடத்தும். உங்களுக்கு அருகாமையில் உள்ள மொழி மதிப்பீட்டு நிலையம் ஒன்றைக் கண்டடைய, ஒன்டாரியோ குடிவரவு வலைப்பக்கத்திற்குச் செல்லுங்கள்.

**என்னால் ஒரு வகுப்பறைக்கு செல்ல முடியாவிட்டால் என்ன செய்வது?**

உங்களால் ஒரு வகுப்பறைக்கு செல்ல முடியாவிட்டால், வேறு சில தெரிவுகள் இதோ:

- உங்கள் மொழித் திறன்களை மேம்படுத்த சில வலைப்பக்கங்கள் உதவக்கூடும்.

- நீங்கள் வீட்டில் படித்து உங்கள் வேலைகளை ஒன்டாரியோ சுயாதீன கல்வி நிலையத்தில் (ILC) உள்ள ஒரு ஆசிரியருக்கு அனுப்பலாம். ILC ஐ பின்வரும் முகவரியில் நீங்கள் காணலாம்: www.ilc.org.
- உங்கள் செவிமடுப்பு, பேச்சு, எழுத்துத்திறன்கள் ஆகியவற்றை மேம்படுத்த வீட்டில் படிக்கும் ஒரு திட்டம் LINC யிடம் உள்ளது. நீங்கள் வீட்டில் படிக்கலாம், இருந்தாலும் ஒவ்வொரு வாரமும் ஒரு ஆசிரியரிடம் இருந்து வழிநடத்துதலைப் பெறலாம்.

**என்னுடைய வேலைக்கேற்ற மொழிப்பயிற்சியை நான் எங்கு பெறலாம்?**

உங்கள் சொந்த நாட்டில் ஒரு குறிக்கப்பட்ட தொழிற்கலை அல்லது உத்தியோகத்தில் நீங்கள் பயிற்சி பெற்றிருந்தால், வேலையில் உதவக்கூடும் மொழித் திறன்களை கட்டியெழுப்புவதில் நீங்கள் ஆர்வம் காட்டக்கூடும். இதோ இரண்டு தெரிவுகள்:

- சில பாலப்பயிற்சித் திட்டங்கள் (bridge training programs) வேலைத்தலத்திற்கேற்ற மொழிப்பயிற்சியை வழங்குகின்றன. ஒன்டாரியோ குடிவரவு வலைப்பக்கத்தின் 'Work in Your Profession' பகுதிக்கு செல்வதன் மூலம் பாலப்பயிற்சித் திட்டங்களைப்பற்றி நீங்கள் அதிகம் கற்றுக்கொள்ளலாம். இந்த வலைப்பக்கத்தை பின்வரும் முகவரியில் காணலாம்: www.OntarioImmigration.ca.
- மேம்படுத்தப்பட்ட மொழிப்பயிற்சி (ELT), குறிக்கப்பட்ட உத்தியோகங்களுக்கு உங்கள் மொழித் திறனை கட்டியெழுப்ப உதவும்.

**நான் மொழிப்பயிற்சியைப் பெற்றுக்கொண்டே என்னுடைய கல்வியைத் தொடரலாமா?**

நீங்கள் 21 வயதிற்கு மேற்பட்டவரானால், உயர்நிலைப் பள்ளியை பூர்த்திசெய்ய உதவும் விசேஷ மொழிப்பாடத்திட்டங்கள் உள்ளன. இந்தப் பாடத்திட்டங்களில் சில தினசரி வாழ்க்கைக்கான மொழியை மேம்படுத்த உதவுகையில் மற்றவைகள் உங்கள் உயர்நிலை பாடசாலை அல்லது கல்லூரி அல்லது பல்கலைக்கழகப் படிப்பிற்கு உதவும். உங்களுக்கு உயர்ந்த தர மொழித்திறன் இருப்பின், வர்த்தக சொற்பொழிவு மற்றும் பேச்சுத் தொடர்புத் திறன்கள் ஆகியவற்றிற்கு உதவும் பாடத்திட்டங்களில் சேரலாம். வாசிப்பதில் அல்லது எழுதுவதில் உங்களுக்கு சிரமம் இருந்தால், உங்களுக்கு உதவ ஆங்கில எழுத்தறிவு அபிவிருத்தி பாடங்களும் இருக்கின்றன.

ஒன்டாரியோ கல்லூரி அல்லது பல்கலைக்கழகம் ஒன்றில் உங்களுக்கு பிரவேசம் கிடைத்தால், ஒரு மொழிப்பரீட்சை எடுக்குமாறு நீங்கள் கேட்கப்படக்கூடும். உதாரணமாக, ஏராளமான

கல்லூரிகளும் பல்கலைக்கழகங்களும் 'Test of English as a Foreign Language' (TOEFL), அல்லது ' International English Language Testing System ' (IELTS) என்பனவற்றை உபயோகிக்கின்றன. ஒன்டாரியோவில் ஏராளமான பல்கலைக்கழகங்களும் கல்லூரிகளும் மொழிப் பயிற்சித் திட்டங்களை வழங்குகின்றன. பொதுவாக இந்தப் பாடத்திட்டங்களுக்கு உங்களிடம் ஒரு கட்டணம் அறவிடப்படும்.

**எனது பிள்ளைகள் எங்கே மொழிப் பயிற்சி பெறலாம்?**

ஒன்டாரியோவின் எலிமென்டரி மற்றும் செக்கன்டரி பள்ளிகள் விசேஷ மொழிப் பயிற்சியை கீழ்காணும் பிள்ளைகளுக்கு வழங்குகின்றன:

- ஆங்கிலம் அல்லது பிரெஞ்சை தங்கள் தாய்மொழியாக பேசாதோர், அல்லது
- ஒன்டாரியோ பள்ளிகளில் பயன்படுத்தப்படாத வேறுவகைப்பட்ட ஆங்கிலம் அல்லது பிரெஞ்ச் மொழி பேசுவோர்.

ஆங்கிலம் கற்றுக்கொண்டு எலிமென்டரி அல்லது செக்கன்டரி பள்ளிகளுக்கு செல்லும் மாணவர்கள், மொழியைப் பழகுபவர்களுடன் வேலை செய்வதில் விசேஷ பயிற்சி பெற்ற ஆசிரியர்களிடமிருந்து உதவி பெறலாம். மாணவர்கள், மொழி மற்றும் எழுத்தறிவுத் திறன்களைக் கட்டியெழுப்பவும் உதவி பெறலாம். ஒன்டாரியோவின் பாடசாலை நிர்வாக சபைகளில் சில, புதிதாக வருவோர் வரவேற்பு நிலையங்களைக் கொண்டுள்ளன. இந்த நிலையங்கள் உங்கள் பிள்ளைகளின் மொழித் திறன்களை அளவிட்டு, அவர்களுக்கு வேண்டிய ஆதரவை வழங்கும் ஒரு பாடசாலையைக் கண்டுபிடிக்க உதவுகின்றன.

**எங்கே அதிகம் கற்றுக்கொள்ளலாம்?**

ஒன்டாரியோவில் வாழ்தல், வேலைசெய்தல் மற்றும் படித்தல் பற்றி நீங்கள் மேலதிகமாக கற்றுக்கொள்ள வேண்டுமா? ஒன்டாரியோ குடிவரவு வலைப்பக்கத்துக்கு விஜயம் செய்யுங்கள். முகவரி: www.OntarioImmigration.ca